**ஆய்வுச்சுடர்**: **பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ்**
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA
ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# கல்வெட்டுகளில் வேளாண் செய்திகள்

**பா. அருள்மனோகரி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகக் கல்லூரி,
சங்கரன்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

---

தமிழர் வாழ்வியலை மரபு அடிப்படையில் ஆராயப்பயன்படும் மூலங்களுள் ஒன்று கல்வெட்டு. இலக்கியங்கள் வழி எவ்வாறு சமூகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறதோ, அதனைப் போன்றே கல்வெட்டுகளும் சமூகத்தை உணர்த்துகின்றன. திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள் இக்கட்டுரைக்குத் தரவுகளாக அமைகின்றன.

சமூகப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கருவிகளுள் ஒன்றான கல்வெட்டில், பயன்படுத்தப்பட்டுள்ள வேளாண் தொடர்பான செய்திகள் மக்களின் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையனவாக உள்ளன. அதனை வெளிப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஆய்வு அமைகின்றது.

**ஆய்வுக் கள கல்வெட்டுகள் அறிமுகம்**

ஆற்றங்கரையில் குடியிருப்புகள் அமைந்து ஒரு நாகரிகத்தை உருவாக்கும் என்பதற்கு மிகப்பெரிய சான்று தாமிரபரணியாகும். தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி, வரலாற்று முக்கியத்துவம் பெற்றதற்குத் தாமிரபரணி ஆறே காரணமாகும். முற்காலப்பாண்டியர், முற்காலச் சோழர், இடைக்காலம் மற்றும் பிற்காலப் பாண்டியர், விசயநகரம், நாயக்கர், கேரள மன்னர், ஐரோப்பியர் என அனைவரது பார்வையிலும் கவரப்பட்டு ஆளப்பட்ட பகுதி ஆகும். இவர்கள் கோயிலுக்குச் செய்த பணிகள், நிர்வாகக் கலாச்சாரப் பணிகள் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலும் வட்டெழுத்துக்களாக இக்கல்வெட்டுகள் அமைந்துள்ளன. அவற்றைத் தற்காலத் தமிழில் மொழிபெயர்த்து 'திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள்' என்ற நூலாகத் தமிழ்நாடு தொல்லியல் துறை 2009 ஆவது ஆண்டில் வெளியிட்டுள்ளது. இந்நூலில் 216 கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள், முதல் தொகுதி, 2009இல் காணப்படுகின்ற வேளாண் தொடர்பான செய்திகள் இங்குத் தொகுத்து விளக்கப்படுகின்றன.

**நிலப்பாகுபாடு**

நிலப்பாகுபாடு, நீர்நிலைகள் உருவாக்கம், பயிரீட்டு முறை. அளவு முறைகள், பயிர்கள் ஆகிய செய்திகள் கல்வெட்டுகளில் உள்ளன. நன்செய், புன்செய் என்ற இருவகை நிலங்கள் குறித்து அறிவோம். அஞ்சாஞ்செய் நிலம், ஆறாஞ்செய் நிலம், திருத்து நிலம், அடைநிலம், வயல், பிலாவிளை, நீர்நிலம், காராண்மை, நீர்ப்பாட்டம், பாடகநிலம், பிடாகைப் பற்று, குளப்புரவு, முக்காணி நிலம், வரம்பு, விளாகம், நத்தம் ஆகிய சொற்பயன்பாடு வேளாண் மக்களிடையே வழக்கிலிருந்ததைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இச்சொற்களில் பல வழக்கிழந்து போயின. பாட்டம், புரவு, திருத்து,முக்காணி போன்ற சொற்கள் இன்றும் ஊர்ப்பெயர்களாக வழக்கில் உள்ளன.

*"தானமான சுங்கந் தவிர்த்த விளாகமும்"* (பக்கம் 7)

*"முக்காணியும் அஞ்சாஞ்செய் நிலம் ஒரு மாவும் நாலாஞ்செய் நிலம் தேவதானம்"*

(பக்கம் 9)

*"சோமனாத தேவன் திருத்து நிலம் பதினான்கும்"* (பக்கம் 13)

*"நத்தமும் நத்தப்பாழும் தோட்டமும் தோட்டக் கிணறும்*
*இடுகூறும் படுகூறும் நன்செய் புன்செய்யும்"* (பக்கம் 89)

*"குளப்புரவும் கையும் மாவடை, மரவடை, பட்டடை பதி முதல்...."* (பக்கம் 154)

*"செங்கழுநீர்ப்பூ, மந்தாரம் அலரிக்கு பாட்டம் பூ இடவும் நிலம் சீவிதம் திருநந்தவனம்.....*
(பக்கம் 173)

எனக் கல்வெட்டுச் செய்திகளில் விளைநில அமைப்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், தானமாக வழங்கப்பட்ட நிலங்கள் பற்றியதாக இச்செய்திகள் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| பட்டடைக் கழனி | - தண்ணீர் இறைத்துப் பயிரிடும் கழனி |
| முக்காணி | - 3/80 என்ற அளவிலான நிலம் |
| திருத்து | - நன்செய் நிலம் |
| மேனி | - நிலத்தின் சராசரி விளைச்சல் |
| நத்தம் | - விளைச்சலுக்குப் பயன்படாத நிலம் |
| புரவு | - ஆற்றுநீர் பாயும் வயல் |
| நந்தவனம் | - பூக்கள் பயிரிடுமிடம் |
| வரம்பு | - நில எல்லை (தற்போது வரப்பு எனப்படல்) |
| காராண்மை | - நிலத்தினை உழுது பயிர் செய்து அரசுக்கு இறை செலுத்தும் வேளாண் குடி. |
| பாடகநிலம் | - 240 குழி கொண்ட நிலம் (1குழி – 144 (நன்செய் நில உட்பிரிவு) சதுரஅடி) |

விளாகம் - பரந்த நன்செய் நிலம்
பிடாகை - சிறிய நிலம்
நீர் நிலம் - நன்செய் நிலம்

*(**சி. கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி**, 1987, **பக்கம்** 311)*

நில எல்லைகளைத் தெளிவுபடுத்த இச்சொற்கள் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. நன்செய் நிலம் பற்றிய சொற்பயன்பாடு, திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகளில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. நன்செய் நில அளவு அதிகமாக இருந்ததை இச்செய்திகள் உணர்த்துகின்றன.

**நீர் நிலைகள்**

நிலங்களின் வளம் நீர்நிலைகளால் உறுதியாகின்றன. உணவிற்கு அடிப்படை நீராதாரம் ஆகும். இன்றைய நில வறட்சியில் முக்கியப் பங்கு வகிப்பது நீர்ப்பற்றாக்குறை ஆகும். மழைநீரைச் சேமிக்க எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படுவதும் இல்லை. ஆனால் மன்னர்கள் ஆற்று நீரையும் மழை நீரையும் வீணாக்காமல் பல நீர்நிலைகளை உருவாக்கினர். அறங்களுள் இன்றியமையாத நற்செயலாக இது கருதப்பட்டது. நீர்வளங்கள் பேணப்பட்ட முறையினைக் கல்வெட்டுகள் வழித் தெளிவாகக் காண முடிகிறது. இன்று அந்நீர்நிலைகளைப் பாதுகாப்பது பற்றியும் புதிதாக உருவாக்குவது பற்றியுமான ஒரு விழிப்புணர்வினை இக்கல்வெட்டுச் செய்திகள் உருவாக்கலாம். அழிந்து வரும் நீர்நிலைகளை மீட்டுக் கொண்டு வருதற்கும் வழி ஏற்பட வாய்ப்புகள் கிடைக்கும்.

தண் பொருந்தம் (தாமிரபரணி), சிற்றாறு ஆகிய நதிகளே வேளாண் வளர்ச்சிக்கு வித்திட்டன. இதனைப் பல இடங்களில் பதிவு செய்துள்ளனர்.

*"**நீர் வாத்துக்குக் குடுத்த நிலமாவது சிற்றாறுக்கு மேக்கு**"* (திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டுகள், பக்கம் 116) முதலாம் குலோத்துங்க சோழனின் சீவலப்பேரி அர்த்தமண்டத்தில் காணப்படும் கல்வெட்டுச் செய்திகளின் காலம் கி.பி.1113 ஆகும்.

ஆறுகளை அடிப்படையாகக் கொண்டு மன்னர்கள் உருவாக்கிய நீர் நிலைகள்: பேரேரி, குளம், வாய்க்கால், மடை என்பன. கிணறுகளும் வேளாண் பாசனத்திற்கு மிகவும் உதவியுள்ளன.

நெல்லையப்பர் கோயில் 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு,

*"**கீழ்நோக்கிய கிணறுகளும் மேனோக்கின மரங்களும் ஆறுபடு(து)ரைகளும் உடும்போடி ஆமை தவழும் நீர்வழங்கு கால் பச்சாற்று மேல் பற்றில் இளைபடி**...." (திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 190)*

*"**தென்பாற்கெல்லை உத்தமப் பேரேரி**"*

(திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, *பக்கம் 191)*

*"**பாப்பான் குளம், குடவி குளம்**"*

*(*திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, *பக்கம் 191)*

*"**உற்திக்காறன் மடை**"*

(திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, *பக்கம் 89)*

*"**மடப்புள இறையிலியாகக் குடுத்த நிலத்துக்கு பிடிபாடு பண்ணிக் குடுத்தப் பரிசாவது.... நாட்டு வேளாண் வாய்க்காலுக்கு வடக்கு**"*

(திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 77)

இவை தவிர நீர் இறைப்புப் பாசன முறையும் மிகுதியாக இருந்துள்ளது.

*"**தென் திருமாலிருஞ்சோலை எம்பொருமானுக்கு வைச்சு குடுத்த பூமி கூடலூர் நிலம் இட்ட காலால் நீர் இறைச்சு**...."*

(திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 118)

என்ற செய்தி இறைப்பு நீர்ப்பாசனத்தை விவரிக்கின்றது.

உடும்பும் ஆமையும் தவழக்கூடிய அளவிற்கு நீர்வளம் மிகுதியாக இருந்துள்ளது. 210 கல்வெட்டுகளில் நீர்நிலை பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. நீரினை வீணாக்காது பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் சேமித்துள்ளதால் வேளாண் சிறப்பாக இருந்துள்ளது. பேரேரி என்பது பெரிய அளவிலான குளத்தினைக் குறித்த சொல். இது, பேரி என இன்று திரிந்து விட்டது. இதனை வெட்டுவதற்கு மாபெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். பழங்கால மன்னர்களால் வெட்டப்பட்ட குளங்கள் காலந்தவறாமல் ஏலமிடப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டன. அதற்கென செலவாகும் தொகைக்கு விளைச்சலில் கிடைக்கும் வரிப்பணம் ஒதுக்கப்பட்டது. இதனை விஜய நாராயணம் கல்வெட்டு உறுதி செய்கிறது. (திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 289) இன்றைய சூழலுக்கு இது தேவையான செய்தியாகும். குளம் தொட்டு வளம் பெருக்கிய நம் முன்னோர் மரபு இன்று மாறிவிட்டது. பல குளங்கள் அடையாளமற்றுப் போயின.

**பயரீட்டு முறை**

திருநெல்வேலி மாவட்டத்தில் கார்சாகுபடி, பிசான சாகுபடி நடந்துள்ளது. 13 மேனி பிசானம் நெல் விளைந்துள்ளது. இருமுறை நெல் விளைவதை இரு பூ விளைச்சல் என்றனர். கார் சாகுபடி என்பது, மே, ஜூன் ஆகிய மாதங்களில் பயிரிடப்படுவது. அப்போது ஏஎஸ்டி 16, ஏஎஸ்டி 17, ஏஎஸ்டி 18, ஏஎஸ்டி 42, ஏஎஸ்டி 43, கோ 47 போன்ற நெல் வகைகளை நடுவர். அந்தப் பருவத்திற்கேற்ற பயிர். பிசான சாகுபடி என்பது செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பயிரிடுவது. ஏஎஸ்டி 18, ஏஎஸ்டி 16, 19, டிஆர்ஒய் 1, கோ

43 போன்ற நெல் வகைகள் பயிரிடப்படும். (agritech.tnau.ac.in>paddy>seasonvariety) இரு போகமும் ஆற்றங்கரையோர நிலங்களில் இன்றும் விளைகின்றன.

"***மடபதிகை நிலவரிசை இரு பூ விளையும்***"

(திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 185)

என்ற குறிப்பு நெல்லையப்பர் கோயிலில் இடம்பெற்றுள்ளது.

"***எள், வரகு, தினைப்புல், கோங்கு விளைந்த நிலத்துக்குப் பதினாறு மேனி திரம்***...." (திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 185) என்ற செய்தி விளைச்சலின் சிறப்பினைக் கூறுகின்றது.

"***அறு நாழிகைக் காலாலே குறுணிமுன்னாழி நெல்லு இவ்வாண்டு பிசான முதல்; கடமையோடே கூட்டி உழுதான் குடியாக***...." (திருநெல்வேலி மாவட்டக் கல்வெட்டு, பக்கம் 82) என உழவு பற்றிய குடி சார்ந்த இருப்பிடத்தைப் பல இடங்களில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. மருத நிலம் சார்ந்த உழவுத் தொழிலை மேற்கொள்ளும் மக்கள் தங்கிய இடமாக இதனைக் கருத முடிகிறது. நிலம் தொடர்பான அளவைப் பெயர்களும் அதிகமாகக் கல்வட்டுகளில் இடம்பெற்றுள்ளன. மா, கலம், தூணி, பதக்கு, முந்திரிகை, காணி போன்ற சொற்களைச் சான்றாகக் கூறலாம்.

**நிறைவுரை**

மன்னர்களின் ஆட்சி முறையின் வளர்ச்சியில் வேளாண்மைத் தொழில் முன்னிலை வகித்துள்ளது. கல்வெட்டுச் செய்திகள் அனைத்திலும் வேளாண் குறிப்புகள் இரண்டறக் கலந்துள்ளன. காலமறிந்து பயிரிடல், நிலத்தைப் பண்படுத்தல்,நீர் வளம் பேணுதல், நிலத்தின் தன்மையறிந்து செயல்படல், மக்களிடம் பெறும் வரியைச் சரியான முறையில் பயன்படுத்தல், உழைப்போருக்கு உதவுதல் போன்ற நற்செயல்கள் நம் முன்னோரிடம் இருந்துள்ளன. நிலத்தையும் நீர் நிலைகளையும் பாதுகாக்க இறைவனோடு தொடர்புபடுத்தி நிலங்களைக் கோயில் பெயரில் எழுதி வைத்துள்ளனர். அவற்றைக் கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்ததை விஜயநாராயணம் கல்வெட்டு தெளிவுபடுத்துகிறது.

மன்னராட்சியின் வளர்ச்சியில் வேளாண் மக்களின் பங்கு இன்றியமையாததாக இருந்துள்ளது.இதனால் அறமும் செழித்துள்ளது. நெல் விளைச்சலில் திருநெல்வேலி சிறப்பிடம் வகித்துள்ளது. இன்றைய சூழலை நோக்கினால் குளங்களும் நன்செய் நிலங்களும் உயிரற்ற நிலையில் உள்ளன. குடியிருப்புகளாக அவை மாறிவிட்டன. 2518 குளங்களில் தற்போது 2498 குளங்கள் வறண்டு விட்டன. இவற்றில் காணாமல் போன குளங்களின் எண்ணிக்கையே அதிகம், வேளாண்மையில் இன்று நாம் பின்தங்கியதன் காரணம் முன்னோர் போற்றிய நீர்நிலைகளைப்பாதுகாக்கத் தவறியதே எனத் தெளியமுடிகின்றது.

## INSCRIPTION ON AGRICULTURE IN EPIGRAPHS

**P. Arulmanohari**

Epigraphs are one of the ways to probe into the lineage of Tamilians. This paper focalizes the epigraphs of Tirunelveli district. Those epigraphs comprise the methods adopted by ancient tamilians in farming.

During the reign of Kings, more importance was laid on farming and ways to preserve water bodies. To preserve the fertility of lands, King donated lands to temples and administrators were appointed to monitor it. These details are found in the epigraph of Vijayanarayanam.

Tirunelveli district was notable for cultivation of paddy. Tamilians preserve water resources and utilized it for cultivation. Now we drawback in attaining profitable yield from agriculture as we have failed to preserve water resources.